மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதுபோன்ற மானியம் வேண்டுமென்று கேட்பது இதுதான் முதல் தடவை. அந்தக் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு லட்சம் ரூபாய் அளித்திருக்கிறார்கள். மேலும் கோரிக்கை வருவதாக இருந்தால் பரிசீலனை செய்யப்படலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த மராமத்து வேலைகளுக்கு வக்ப் போர்டிலிருந்து எவ்வளவு ஒதுக்கி யிருக்கிறார்கள் ? மதுரை, கோரிபாளையம் போன்ற இடங்களில் பழைய பள்ளிவாசல்கள் இருக்கின்றனவே. அவைகளையும் புதுப்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் ஜப்பார் அவர்கள் சொல்லும்போது வக்ப் போர்டில் நிதி நிலைமை சரியாக இல்லை என்று சொன்னார்கள். ஆகவே, அவர்களால் நிதி உதவி செய்ய முடியாது என்று தெரிகிறது. அரசாங்கத்திடம் உதவி கேட்கப்பட்டது. அற நிலையத் துறையில் கொடுக்கப்படுவது போல ஒரு லட்சம் ரூபாய் மானியம் கொடுக்கப்பட்டது. மேலும் இம்மாதிரியான காரியங்கள் எல்லாம் அரசாங்க உதவியைக் கொண்டு மட்டும் செய்ய முடியாது. பொதுமக்கள் நன்கொடைகள் மூலமாகச் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, தியாகராய நகரில் ஒரு மசூதியை ஆரம்பிக்க விண்ணப்பம் செய்து கொண்டதும், உடனே அந்த இடத்தில் ஒரு திடீர் பிள்ளையார் தோன்றியதையும் அரசு அறியும். திரும்ப அந்த இடத்தில் மசூதி கட்ட ஆரம்பிக்கப்பட்டுவிட்டதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது மூலக் கேள்வியோடு தொடர்புடைய ஒன்று அல்ல. எனவே பதில் சொல்ல முடியவில்லை.

Declaration of assets of members of Local Bodies

*64 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to regulate the declaration of assets of members of Local Bodies; and

(b) if so, the details thereof?

1973 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களின் (மதுரை மாநகராட்சியை உள்ளிட்ட, ஆனால் சென்னை மாநகராட்சியைத் தவிர்த்து) உறுப்பினர்களும் அவரது குடும்பத்தினரும் தங்கள் தங்கள் சொத்து விவரங்களை ஆண்டுக்கு ஒரு முறை அறிவிக்க வேண்டி விதிமுறைகளை அரசாங்கம், 1973 ஏப்ரல் மாதத்தில் வெளியிட்டது.

சென்னை மாநகராட்சி உறுப்பினர்களைப் பொறுத்தவரை, சென்னை நகர முனிசிபல் மாநகராட்சி சட்டத்தின் விதிகளுக்கேற்ப சொத்து விவரங்களை அறிவிக்க வேண்டிய வரைவு விதிகளை முதனிலே வெளியீடாக வெளியிட்டு, மாநகராட்சி மன்றத்தின் கருத்தறிய அனுப்பப்பட்டுள்ளது. கருத்தறியக் குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன், மேற்கூறிய விதிகள் உறுதி செய்யப்பட்டு ஆணை பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். டென்னிஸ்: இதுபோல பஞ்சாயத்து யூனியனில் உள்ள கவுன்சிலர்களுக்கும் இந்த நடைமுறை கையாளப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கிற சட்டப்படி சென்னை மாநகராட்சி மட்டும் வரவில்லை. அதைத் தவிர மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், மேயர், துணை மேயர் உட்பட, நகராட்சி மன்ற உறுப்பினர்கள், தலைவர், துணைத் தலைவர் உட்பட, ஊராட்சி ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், தலைவர், துணைத் தலைவர் உட்பட ஒன்றிய உறுப்பினர்கள், தலைவர், துணைத் தலைவர் உட்பட, ஆகிய எல்லோருக்கும் இது பொருந்தும்.

Singanallur Municipal Council

* 65 *Q.*—THIRU A. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any petition containing allegations against the Chairman of the Singanallur Municipal Council was signed and sent to the Government by the members of that Council on 19th September 1972; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.